**செம்பாக்கம் நகராட்சியில் 29.11.2019ம் நாள் வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணியளவில் தனி அலுவலர் அவர்களின் தலைமையில் நடைப்பெற்ற அவசரக்கூட்டத்தின் நடவடிக்கைகளின் நகல்.**

**கலந்துக்கொண்ட தனி அலுவலர் பெயர் மற்றும் பதவி:** **திருமதி. மு.ரா. வசந்தி**
**தனி அலுவலர் / ஆணையாளர்,**
**செம்பாக்கம் நகராட்சி**

**பொருள் எண்.1**

செம்பாக்கம் நகராட்சி ஆணையர் அவர்களின் நவம்பர் **2019** மாதத்திய நாட்குறிப்பேட்டினை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்.571** **பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண்.2**

தமிழ்நாடு அடிப்படை கட்டமைப்பு வளர்ச்சி நிதி அமைப்பு (TNUIFSL) மூலம் **4.9.2019**ம் தேதியன்று நடைப்பெற்ற கூட்ட நடவடிக்கைகளில் சென்னை பெருநகர் வளர்ச்சி குழும ஆளுகைக்குட்பட்ட பகுதியில் (சிட்லபாக்கம் பேரூராட்சி, மாடம்பாக்கம் பேரூராட்சி, வேங்கைவாசல் ஊராட்சி, நன்மங்கலம் ஊராட்சி, கோவிலம்பாக்கம் ஊராட்சி, மேடவாக்கம் ஊராட்சி, பெரும்பாக்கம் ஊராட்சி, சித்தாலபாக்கம் ஊராட்சி, ஒட்டியம்பாக்கம் ஊராட்சி, அகரம்தென் ஊராட்சி, மதுரபாக்கம் ஊராட்சி, திருவஞ்சேரி ஊராட்சி மற்றும் நெடுங்குன்றம் ஊராட்சி) உள்ள உள்ளாட்சி அமைப்புகளில் பாதாள சாக்கடை திட்டம் தொகுப்பு அடிப்படையில் (Cluster Basis) செயல்படுத்துவதற்கான பூர்வாங்க பணிகளை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், பேரூராட்சிகள் இயக்குநர் மற்றும் மாவட்ட ஊரக வளர்ச்சி இயக்குநர் ஆகியோரை உரிய நகர மன்ற ஒப்புதலுடன் கருத்துரு அனுப்ப கேட்டுக் கொள்ளப்பட்டது.

அதன் அடிப்படையில் செம்பாக்கம் நகராட்சி மற்றும் அதனை சுற்றியுள்ள **13** உள்ளாட்சி அமைப்புகளை கொண்டு தொகுப்பு அடிப்படையில் (Sembakkam Cluster) பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்துவதற்கு தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு மற்றும் நிதி கழகம் PDGF (Project Development Grant Fund) நிதியுதவி மூலம் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** **1.** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**2.** நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அனுமதிக்கு பிரேரணை அனுப்ப மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.572** **அலுவலக குறிப்பிற்கு அனுமதி வழங்கப்பட்டது.**

**பொருள் எண்.3**

செம்பாக்கம் நகராட்சி எல்லைக்குட்பட்ட ராஜகீழ்பாக்கம் கிராமம் நில அளவை எண். 97/1, 97/3, 97/5, 97/1சி1, 97/9 மற்றும் 91/2 ஷீரடி அவென்யு பகுதியில் மனை உட்பிரிவு செய்யும் வகையில், சாலைக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட நில பகுதியினை மனுதாரர்கள் திருமதி. சி. நாகலட்சுமி மற்றும் திரு. ஆர். வெங்கடகுமார் ஆகியோரால் கீழ்காணும் விவரப்படியாக தான பத்திரம் மூலம் நகராட்சிக்கு பத்திர பதிவு செய்து ஒப்படைக்கப்பட்டுள்ளது.

| வ. எண். | மனுதாரர் பெயர் | நில அளவை எண். | சாலைக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட பகுதி (ச.மீ) | தான பத்திர பதிவு எண் மற்றும் நாள் |
|---|---|---|---|---|
| 1 | சி. நாகலட்சுமி | 97/1 | 253.13 | 12703/2019<br>25.10.2019 |
| 2 | சி. நாகலட்சுமி | 91/3 | 225.84 | 12708/2019<br>25.10.2019 |
| 3 | சி. நாகலட்சுமி | 97/5 | 14.40 | 12705/2019<br>25.10.2019 |
| 4 | சி. நாகலட்சுமி | 91/1சி1 | 104.94 | 12709/2019<br>25.10.2019 |
| 5 | ஆர். வெங்கடகுமார் | 97/9 | 240.15 | 12707/2019<br>25.10.2019 |
| 6 | ஆர். வெங்கடகுமார் | 97/9 | 60.59 | 12706/2019<br>25.10.2019 |
| 7 | ஆர். வெங்கடகுமார் | 91/2 | 323.32 | 12704/2019<br>25.10.2019 |

தான பத்திரம் மூலம் ஒப்படைப்பு செய்யப்பட்ட சாலைபகுதியினை நகராட்சி வசம் ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** தான பத்திரம் மூலம் ஒப்படைப்பு செய்யப்பட்ட சாலைப்பகுதியினை நகராட்சி வசம் ஏற்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.573 அலுவலக குறிப்பு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்.4**

செம்பாக்கம் நகராட்சியில் 2019—20 ம் ஆண்டின் பொது நிதியின் கீழ் 27.11.2019 ம் நாள் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ. லட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி விவரம் | விலை விகிதம் |
|---|---|---|---|---|

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | Supply of Saw Dust, Waste Oil, Cloth Etc for preparation of OIl Balls under Dengu Control Activities<br>1. மரத்தூள்<br>2. கழிவு ஆயில்<br>3. காடா துணி | 1.00 | கே. ராமதாஸ் | மதிப்பீட்டை விட குறைவு |
| | | | சிம்லா கூல் மேக்கர்ஸ் | மதிப்பீட்டை விட அதிகம் |

**அலுவலக குறிப்பு:** பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரருக்கு தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றம் பின்னேற்பு அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.574 அலுவலக குறிப்பு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்.5**

செம்பாக்கம் நகராட்சியில் **2019–20** ம் ஆண்டின் பொது நிதியின் கீழ் **21.11.2019** ம் நாள் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | விவரம் | ஒப்பந்தப்புள்ளி நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | |
|---|---|---|---|
| | | ஓம் சப்தி எண்டர்பிரைசஸ்<br>நெ.**496**, பசுபதி தெரு,<br>நசரத்பேட்டை,<br>சென்னை – **23** | ராதா டிரான்ஸ்போர்ட்<br>நெ.**1/136**, பாரதியார் தெரு,<br>சிங்கபெருமாள் கோயில்<br>**603204.** |
| 1 | எரியூட்ட தகுதியான கழிவுகள் (Combustible Waste) அரியலூார் மாவட்டம் அல்ட்ரா டெக் சிமெண்ட் நிறுவனத்திற்கு எற்றி செல்லும் பணிக்கு லாரி சப்ளை செய்தல் | ரூ.24000 | ரூ.25000 |
| | ஒப்பந்தப்புள்ளி விகிதம் | குறைவு | அதிகம் |

**அலுவலக குறிப்பு:** பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரருக்கு தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றம் பின்னேற்பு அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.575 அலுவலக குறிப்பு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்.6**

செம்பாக்கம் நகராட்சியில் **2019–20** ம் ஆண்டின் பொது நிதியின் கீழ் **29.11.2019**ம் தேதியன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பார்வைக்கும்,

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ. லட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி விவரம் | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | செம்பாக்கம் நகராட்சியின் பராமரிப்பில் உள்ள 12 எண்ணிக்கையிலான பூங்காக்களை பராமரிப்பு பணிக்காக தேவைப்படும் பணியாட்களை சப்ளை செய்தல் பணி. | 9.80 | ஷைன் எண்டர்பிரைசஸ் | மதிப்பீட்டை விட 0.20% குறைவு |
| | | | எம். மாதவன் | மதிப்பீட்டை விட 1.20% அதிகம் |
| 2 | வார்டு எண்.1 திருமலை நகர் பூங்கா – 2ல் உள்ள உள்விளையாட்டு கூடத்தில் கூடுதலாக விளக்குகள் மற்றும் காற்று போக்கிகள் பொருத்தும் பணி. | 0.85 | ஆர். பி. கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் | மதிப்பீட்டை விட 0.20% குறைவு |
| | | | எல். கிஷோர் குமார் | மதிப்பீட்டை விட 1.30% அதிகம் |
| 3 | குளோரினேஷன் அமைப்பில் உள்ள மின் மோட்டார்கள் பழுது நீக்கம் மற்றும் பராமரிப்பு பணி செய்தல். | 3.00 | ராம் அசோசியேட்ஸ் | மதிப்பீட்டை விட 0.15% குறைவு |
| | | | ஆர். சுஜாதா | மதிப்பீட்டை விட 1.40% அதிகம் |
| 4 | வார்டு எண்.1 வேம்புலி நகர் 1வது தெரு, வார்டு எண்.4 நாகலிங்கம் தெரு, அம்பேத்கார் தெரு மேற்கு 1வது குறுக்கு தெரு, திருக்குறள் 3வது குறுக்கு தெரு ஆகிய தெருக்களுக்கு பேவர் பிளாக் சாலை அமைத்தல் பணி மற்றும் அம்பேத்கார் தெரு கிழக்கு பகுதியில் சிறுபாலம் அமைத்தல் பணி | 9.90 | கே. ராம்தாஸ் | மதிப்பீட்டை விட 0.10% குறைவு |
| | | | ஆர். சுஜாதா | மதிப்பீட்டை விட 1.60% அதிகம் |

**அலுவலக குறிப்பு:** பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரருக்கு தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றம் பின்னேற்பு அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.576 அலுவலக குறிப்பு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்.7**

செம்பாக்கம் நகராட்சியில் 2019–20 ம் ஆண்டின் பொது நிதியின் கீழ் 28.11.2019ம் தேதியன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பார்வைக்கும்,

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ. லட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி விவரம் | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.5 சங்கோதி அம்மன் கோயில் தெரு 4வது தெரு, குறுக்கு | 9.00 | கே. ராமதாஸ் | மதிப்பீட்டை விட 0.15% குறைவு |

| | | | | |
|---|---|---|---|---|
| | தெரு மற்றும் 5வது தெருவிற்கு மழைநீர் வடிகால்வாய் மற்றும் சிறுபாலம் அமைத்தல் பணி | | ஆர். சுஜாதா | மதிப்பீட்டை விட 1.50% அதிகம் |
| 2 | வார்டு எண்.5 சங்கோதியம்மன் கோயில் தெரு - MAV வசந்தம் அவென்யூ மற்றும் 3வது தெருவிற்கு மழைநீர் வடிகால்வாய் மற்றும் சிறுபாலம் அமைத்தல் பணி | 7.50 | கே. ராமதாஸ் | மதிப்பீட்டை விட 0.15% குறைவு |
| | | | ஆர். சுஜாதா | மதிப்பீட்டை விட 1.50% அதிகம் |

**அலுவலக குறிப்பு:** பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரருக்கு தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றம் பின்னேற்பு அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.577 அலுவலக குறிப்பு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்.8**

செம்பாக்கம் நகராட்சி எல்லைகுட்பட்ட பகுதியில் உள்ள 48000க்கு மேற்பட்ட வாக்காளர்களின் பதிவு விவரத்தில் ஆதார் எண் இணைப்பு பணியினை வலைதளத்தில் மேற்கொள்ள மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தேர்தல் தொடர்பான ஆய்வு கூட்டத்தில் அறிவுறுத்தியதன் பேரில் இந்நகராட்சியில் இப்பணியினை வலைதளத்தில் உள்ளீடு செய்யும் பணியினை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளிகள் கோரி பெறுவதில் காலதாமதம் ஏற்படுவதை தவிர்த்து அவசர அவசியம் கருதி, உள்ளூர் Data Entry Work செய்யும் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் பெற்று குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்தின் மூலம் நடவடிக்கை மேற்கொண்டதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பொருளின் விவரம் | விலைப்புள்ளி நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | |
|---|---|---|---|
| | | **Global Tech Solutions No.15, 10th Street, BV Nagar, Nanganallur, Chennai – 114** | **Real Tech Systems No.10, Vengamedu Cross Street, Perungudi, Chennai – 96.** |
| 1 | Data Entry Work for Aadhar Seeding in Voters ID at TNSEC Website | Rate Per Entry **1.00** (Inclusive of GST) | Rate Per Entry **1.20** (Inclusive of GST) |
| | **விலைப்புள்ளி விகிதம்** | **குறைவு** | **அதிகம்** |

**அலுவலக குறிப்பு:** அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் மன்ற முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

**தீர்மான எண்.578 அலுவலக குறிப்பு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்.9**

செம்பாக்கம் நகராட்சி பொது நிதி 2019-20-ன் கீழ் மேற்கொள்ளப்படவுள்ள பணிகளுக்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகள் மன்றத்தின் பார்வைகும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. லட்சத்தில் |
|---|---|---|
| 1 | மழையின் காரணமாக ஆங்காங்கு சாலைகளில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சீரமைத்தல் பணி | 9.90 |
| 2 | வார்டு எண்.2 அம்பேத்கார் பூங்கா சுற்றுச்சுவர் அமைத்தல் பணி | 9.90 |
| 3 | வார்டு எண். 5 துர்கா காலனி 1வது தெருவிற்கு மூடியுடன் கூடிய மழைநீர் வடிகால்வாய் மற்றும் சிறுபாலம் அமைத்தல் பணி | 8.60 |
| 4 | வார்டு எண்.7 சரஸ்வதி நகர் 1வது மெயின் ரோடு, மற்றும் மாடம்பாக்கம் மெயின் ரோட்டிலிருந்து விஜிபி சீனிவாசா நகர் 1வது மெயின் ரோடு – ரூபி ஹோம்ஸ் சாலை சந்திப்பு வரை தார் சாலை அமைத்தல் பணி | 9.90 |
| 5 | வார்டு எண். 5 துர்கா காலனி 2வது தெருவிற்கு மூடியுடன் கூடிய மழைநீர் வடிகால்வாய் அமைத்தல் பணி | 7.50 |
| 6 | வார்டு எண். 5 துர்கா காலனி 5வது குறுக்கு தெருவிற்கு மூடியுடன் கூடிய மழைநீர் வடிகால்வாய், சிறுபாலம் அமைத்தல் பணி மற்றும் கிருஷ்ணா நகர் பிரதான சாலையில் உள்ள பழைய மழைநீர் வடிகால்வாய்க்கு மூடி அமைத்தல் பணி | 9.50 |
| 7 | வார்டு எண். 5 இந்திரா காந்தி தெரு மழைநீர் வடிகால்வாய் மற்றும் சிறுபாலம் அமைத்தல் பணி | 8.20 |
| 8 | வார்டு எண். 5 ராமன் தெரு பேவர் பிளாக் சாலை அமைத்தல் பணி | 2.30 |
| 9 | வார்டு எண். 5 டெல்லஸ் அவென்யு 5வது மெயின் ரோட்டில் மழைநீர் வடிகால்வாயுடன் இரண்டு சிறுபாலங்கள் அமைத்தல் பணி மற்றும் பாரதியார் தெருவில் பூங்கா சுற்றுச்சுவரினை ஒட்டி பேவர் பிளாக் அமைத்தல் பணி | 6.20 |
| 10 | வார்டு எண்.2 காயத்திரி நகர் 2வது குறுக்கு தெரு, வார்டு எண்.5 ராஜபாண்டியன் அவென்யு மழைநீர் வடிகால்வாய் மற்றும் சிறுபாலம் அமைத்தல் மற்றும் எம்.ஏ.வி. பள்ளி முன்புறம் பேவர் பிளாக் சாலை அமைத்தல் பணி | 9.50 |
| 11 | வார்டு எண்.11 காந்தி நகர் 3வது தெரு, வார்டு எண்.3 விஜிபி பொன் நகர் 3வது தெரு ஆகிய தெருக்களில் மழைநீர் வடிகால்வாய் அமைத்தல் பணி மற்றும் மழைநீர் வடிகால்வாய்வாயில் குப்பைகளை தடுக்க தடுப்பு கிரில் அமைத்தல் பணி மற்றும் வேணுகோபால்சாமி தெருவில் தடுப்பு சுவர் அமைத்தல் பணி | 2.60 |
| 12 | வார்டு எண்.7 சத்ய சாய் நகர் 3வது குறுக்கு தெருவில் மழைநீர் வடிகால்வாய் அமைத்தல் பணி | 8.20 |
| 13 | செம்பாக்கம் நகராட்சியின் குடிநீர் விநியோக பிரிவின் பராமரிப்பில் உள்ள மின் மோட்டார்கள் பராமரித்தல் பணி | 4.00 |
| 14 | வார்டு எண்.1 திருமலை நகர் 13வது தெரு மற்றும் ஏர்போர்ட் காலனி, வார்டு எண்.7 சிவசக்தி நகர் விரிவு ஆகிய தெருக்களில் மழைநீர் வடிகால்வாய் அமைத்தல் பணி | 9.90 |
| 15 | வார்டு எண்.7 காந்தி நகர் மெயின் ரோடு மற்றும் 2வது குறுக்கு தெரு தார் | 9.90 |

| | | |
|---|---|---|
| | சாலை அமைத்தல் பணி | |
| 16 | வார்டு எண்.7 காந்தி நகர் 1வது தெரு, 2வது தெரு தார் சாலை அமைத்தல் பணி மற்றும் மூடியுடன் கூடிய மழைநீர் வடிகால்வாய் அமைத்தல் பணி | 9.90 |

**அலுவலக குறிப்பு :–**

1. தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகளுக்கு நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலரின் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியமைக்கு மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

**தீர்மான எண்.579 அலுவலக குறிப்பு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**தனி அ லுவலர் மற்றும் ஆணையாளர்**
**செம்பாக்கம் நகராட்சி**